**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண். 153/2022

நாள்: 10.03.2026

பெயர்: ராமலிங்கம் த/பெ: ரத்தினம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**1ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...**

1. எனது தாத்தா பெயர் ராமன் என்றால் சரிதான். ராமனுக்கு எனது அப்பாவையும் சேர்த்து 8 வாரிசுகள் என்றால் சரிதான். எனது அப்பா ரத்தினத்திற்கு என்னனையும் சேர்த்து 6 வாரிசுகள் என்றால் சரிதான். எனக்கு ஒரு அண்ணன் கலியபெருமாள் என்பவர் இருந்து இறந்து விட்டார். அவருக்கு திருமணம் ஆகவில்லை. மற்றொரு அண்ணன் மருதமுத்து தான் 3ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். மருதமுத்து திட்டக்குடியில் குடும்பத்துடன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்து உள்ள கிராமத்தில் மருதமுத்துவிற்கு சொத்து உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்துக்கள் குறித்து வாதிகள் மற்றும் எனக்கும் 3ஆம் பிரதிவாதிக்கும் இடையே பாகம் பிரியவில்லை என்றால் சரிதான். எனது அப்பா 21.05.1989 ஆம் ஆண்டு இறந்து விட்டார் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. வருவாய் துறையில் எனது அப்பா இறந்த பிறகு வாரிசு சான்றிதழ் வழங்கிய விபரம் எனக்கு தெரியாது. எனது அப்பா இறந்த பின்னர் வாரிசு சான்றிதழ் (வா.சா.ஆ,1) வழங்கிய விபரம் எனக்கு தெரியும் என்றும் தற்போது தெரியவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தந்தை இறக்கும் வரை தாவா சொத்துக்களை பொறுத்து எவ்வித வில்லங்கம் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 306/10 ஏ இல் 5.5 ஏர்ஸ் அதாவது தாவா 1ஆம் அயிட்ட சொத்து எனது பெயரிலும் வாதிகளின் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரியல்ல.

2. எனது வழக்குரையில் **சர்வே எண் 306/10 ஏ** இல் 5.5 ஏர்ஸ் சொத்திற்கு வாதிகள் பெயரிலும் என் பெயரிலும் கூட்டு பட்டாவாக இருப்பதை ஒப்புக்கொண்டு தற்போது இல்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. தாவா 2வது அயிட்ட சொத்து எனது அப்பா பெயரில் இருந்தது என்றால் சரிதான். 07.03.2017 தேதியில் எனது பெயருக்கு பட்டா தாவா 2வது அயிட்ட சொத்திற்கு ஏற்பட்டது என்றால் சரிதான். எனது செல்வாக்கை பயன்படுத்தி இந்த சொத்திற்கு மற்ற வாரிசுகளை மறைத்து என் பெயரில் மட்டும் நான் பட்டா வாங்கிக் கொண்டேன் என்றால் சரியல்ல. 2ஆம் அயிட்ட சொத்தை பொறுத்து என் பெயரில் மட்டும் பட்டா ஏற்படுத்திக் கொண்டதால் எனக்கு எந்த வித பலனும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்பெயரில் 2வது அயிட்ட சொத்தை பொறுத்து பட்டா ஏற்படுவதற்கு முன்பே பெயரளவில் 2ஆம் பிரதிவாதி ஒரு கிரய பத்திரம் ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரிதான். **வா.சா.ஆ.3** ல் பக்கம் 3ல் அது எனக்கு பூர்வீக சொத்து என்று எழுதி தான் கிரயம் கொடுத்தேன் என்றால் சரிதான். **வா.சா.ஆ.3** ல் வாதிகளும் 3ஆம் பிரதிவாதியும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். **வா.சா.ஆ.3** ல் ஏற்பட்ட விபரம் வாதிகளுக்கு தெரிந்து தான் ஏற்பட்டது. நான் 2ஆம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரயம் குறித்து வாதிகளுக்கு தெரியாது என்றும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் வில்லங்கம் பார்க்கும் பொழுது தான் வாதிகள் தெரிந்து கொண்டார்கள் என்றால் சரியல்ல.

3. நான் 2ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த இடத்தில் தான் நான் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. அந்த வீட்டில் தான் நான் படுத்து உறங்குவேன். அந்த 2ஆம் அயிட்ட சொத்தை பொறுத்து எனது பெயரிலும் 2ஆம் பிரதிவாதியின் பெயரிலும் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.4** ஆகும். தாவா 2ஆம் அயிட்ட சொத்திற்கு கீழ்புறம் 2ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது. அந்த வீட்டில் தான் 2ஆம் பிரதிவாதியும் அவர்கள் குடும்பமும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 13.08.2009 அன்று 2ஆம் பிரதிவாதிக்கு நான் எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் வா.சா.ஆ.3 ஆவணம் இந்நாள் வரை நடைமுறைக்கு வரவில்லை என்றும் அதனால் தான் என் பெயரிலும் 2ஆம் பிரதிவாதியின் பெயரிலும் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள

வா.சா.ஆ.3 ல் என்னுடைய சொத்திற்கு உண்டான புல எண் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் 2ஆம் பிரதிவாதிக்கு **வா.சா.ஆ.3** ல் எழுதிக்கொடுக்கும் பொழுது அந்த கிரயத்திற்கு மறுபயனாக பணம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் அதற்கு ரூ.1000/– பணம் வாங்கினேன். அந்த பணத்தை சகோதர சகோதரிகளுக்கு பிரித்து கொடுத்தேனா என்றால் இல்லை. வாதிகளுக்கும் 3ஆம் பிரதிவாதிக்கும பிள்ளைகள் மற்றும் பேர பிள்ளைகள் உள்ளது என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். எனக்கும் 3ஆம் பதிரதிவாதிக்கும் பேச்சு வார்த்தை உள்ளதா என்றால் உள்ளது. எங்கள் இருவருக்கும் எந்த வருத்தமும் இல்லை. அவர் தாவா சொத்து உள்ள கிராமத்திற்கு வந்தால் 2ஆம் வாதி வீட்டில் தான் தங்குவார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா 1ஆம் அயிட்ட சொத்தை பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள **பி.வா.சா.ஆ.1** ல் உள்ள முத்து சாமிக்கும் இந்த சொத்திற்கும் சம்ம்ந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி **பி.வா.சா.1**ல் உள்ள விபரங்கள் 1970 ஆம் வருடத்திற்கு முன்பு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4. எனது அப்பா இறக்கும் வரையில் அவர் பெயரில் பட்டா இருந்தது என்றும் அவர் இறந்த பின்னர் எனது பெயரிலும் வாதியின் பெயரிலும் கூட்டு பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். முத்துசாமியிடம் இருந்து நான் தனிப்பட்ட முறையில் வாய்மொழியாக கிரயம் வாங்கினேன் என்று சாட்சி கூறுகிறேன். எனது அப்பாவிடம் இருந்து முத்துசாமிக்கு எவ்வாறு சொத்து சென்றது என்றால் அது குறித்து பார்த்தால் தான் தெரியும். நான் முத்து சாமியிடம் இருந்து கிரயம் வாங்கியதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால சரிதான். நான் வாதிகளுக்கு சொத்து தரக்கூடாது என்று அவர்களை ஏமாற்றும் எண்ணத்தில் முத்து சாமியிடம் இருந்து வாய்மொழியாக கிரயம் பெற்று என்று பொய்யாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா இருக்கும் வரையில் நான் வாதிகள் மற்றும் 3ஆம் பிரதிவாதி ஒரே குடும்பத்தில் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்றால் சரியல்ல. வாதிகள் அப்பாவை பார்க்க

வருவார்கள் செல்வார்கள். 2 மற்றும் 3 ஆம் வாதிகளுக்கு தாவா சொத்து உள்ள கிராமத்தில் தான் ரேசன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. 3ஆம் பிரதிவாதியின் மகன் ஒரு மாத்திற்கு முன்பு இறந்து விட்டார் என்றால் சரிதான். அந்த இறப்பிற்கு நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. என்னை அடிக்க வந்தார்கள் அதனால் செல்லவில்லை. தாவா 1ஆம் அயிட்ட சொத்தில் இருந்து அந்த இறுதி சடங்குகள் நடந்தது என்றால் சரிதான். தாவா 1ஆவது அயிட்ட சொத்தில் 3ஆம் பிரதிவாதி சுமார் 10 ஆண்டுகளாக இருந்து வருகிறார். எனது தந்தை இறக்கும் முன்பு 1988 ஆம் ஆண்டு என் தந்தையை பராமரிப்பதற்கு வழக்கு சொத்துக்களில் பங்கு தருவதாக வாக்குறுதி கொடுத்து தாவா 1வது அயிட்ட சொத்தில் 2,3 வாதிகளை தங்க வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை அது அரியலூரில் எழுதப்பட்டது. நான் வாதிகளுக்கு பாகம் தருகிறேன் என்று உறுதி அளித்த காரணத்தினாரல் தான் தாவா சொத்து உள்ள கிராமத்தில் வந்து தங்கி எனது அப்பாவை பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. என் தரப்பதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **பி.வா.சா.4** ஆதரவில் தாவா 2வது நஞ்சை வகைப்பாட்டை சேர்ந்தது என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா முதல் அயிட்டம் வருவாய் துறை ஆவணங்களின் படி நஞ்சை என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ஆம் வாதி தாவா 1வது இன சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு பெற வீட்டு வரி ரசீதை ஊராட்சி மன்ற தலைவரிடம் கேட்ட போது மறுப்பு தெரிவித்தார்களா என்றால் தெரிவிக்கவில்லை. என்பெயரில் வீட்டு வரி ரசீது உள்ளது என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளளேன் . ஆனால் நான் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சி கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு எனது அப்பா திருமணம் செய்து வைக்கும் பொழுது நான் மைனராக இருந்ததால் திருமணத்தின் போது முழுமையான விபரம் தெரியாது

என்றால் சரியல்ல. வாதிகளுக்கு சொத்து தருவதாக உறுதி அளித்து எனது அப்பா அவர்களுக்கு எந்த சீர்வரிசையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் கிரய சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு என் பெயரில் கிரய பத்திரம் உள்ளதா என்றால் இல்லை. எனவே தாவா சொத்துக்கள் எனது கிரய சொத்துக்கள் என கூறுவதற்கு எனக்கு உரிமையோ அதிகாரமோ இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் எனது அப்பாவின் பூர்வீக சொத்துகள் என்பதால் வாதிகளுக்கு அதில் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் 2ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த **வா.சா.ஆ.3** செல்லாது என்றும் அது வாதிகளை எந்த காலத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் எனது எதிர் வழக்குரையிலும் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கட்சி நடத்துகிறேன் என்றால் சரியல்ல. எனவே தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—ராமலிங்கம்

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்லி, என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டி, அவரால் சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

ஒப்பம்/—S.தனலெட்சுமி

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

ஜெயங்கொண்டம்